**தலைப்பு 247 – இலங்கை சுங்கம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுங்கத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை சுங்கத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3(அ) பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் குறிப்பிட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களானது சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுடன் இணங்கியிருக்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும் அத்தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பம் கீழே தரப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் வைப்புக்கணக்குகள் தொடர்பான தகவல்கள் படிவம் இலக்கம் ஏசீஏ 4 இன் மூலம் ஒவ்வொரு வைப்புக் கணக்கில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் திணைக்கள ஏடுகள் மற்றும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் தனித்தனியாகச் | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வருடாந்தம் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை | ACA 4 படிவத்தில் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மீதியாக விசேடமாக குறிப்பிடப்படாததனால் அதில் திறைசேரி கணனி அச்சுப்பிரதி மீதி காட்டப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிலிருந்து ACA 4 படிவத்தில் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மீதியாகக் காட்டுவதற்கு |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக இலங்கை சுங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ 4 படிவம் திறைசேரி அச்சுப் பிரதிகளில் குறிப்பிட்ட தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக திணைக்கள ஏடுகளின் பிரகாரம் காணப்படுகின்ற மீதிகள் தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | எடுத்தல் வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான வருமானம் திணைக்களத்தின் வருமானக் குறியீட்டு இலக்கம் 1003.07.16 இன் கீழ் வாகன உரிமை வரியின் மூலம் எதிர்பார்த்த வருமானம் ரூபா 2,200,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான வருமானமாக ரூபா 1,357,955,886 சேகரிக்கப்பட்டிருந்தது. இது இலங்கை சுங்கத்தின் தலைப்பு 247 இன் கீழ் கணக்குகளில் காட்டுவதற்குப் பதிலாக ஏனைய தலைப்பு வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயான வித்தியாசத்திற்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | அதிகாரச்சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு இணங்க வருமான குறியீட்டினை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. 2019.04.30 ஆந் திகதிய சுற்றறிக்கையின் மூலம் இந்த வருமானக் குறியீடு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் இவ் வருமானம் சுங்க திணைக்களத்தின் செலவுத் தலைப்பு 247 இன் கீழ் மாற்றப்பட்டிருக்காமையின் காரணமாக தலைப்பு 247 மாதாந்த கணக்கு பொழிப்பினை அடிப்படையாகக் கொண்டு இறுதிக் கணக்கிற்கான பெறுமதிகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் இத்தவிர்த்தல் இடம்பெற்றுள்ளது அதனை அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மூலம் சரிசெய்து 2020 ஆம் ஆண்டிற்கான கணக்கிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | இம்முரண்பாட்டிற்கான காரணமாவது வாகன இறக்குமதியின் அளவு குறைவடைந்தமையினால் வாகன உரிமைகளின் அடிப்படையிலான வரி தொடர்புபடுவதானது தீர்வைப் பதிவேட்டின் பெயர் குறித்து வகைப்படுத்தல் தலைப்பு இலக்கம் 8701, 8703, 8704, 8711 என்பவற்றின் கீழாகும். வாகன உரிமைகளின் அடிப்படையில் வரி தீர்மானிக்கப்படுவதானது வாகனம் இறக்குமதி செய்யப்படும் அளவின் அடிப்படையில் என்பதுடன் (ஒரு வாகனத்திற்கு ரூபா 2,000) அது 52% குறைவாகும். மேற்கூறிய வகைப்படுத்தல் இலக்கத்திற்குரியவை குறைவடைந்துள்ளது. மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது இது மேலும் தெளிவடையும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் 2473 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், கூலி, மேலதிக நேர வேலை, விடுமுறை தினச் சம்பளம், ஊக்குவிப்பு, படி என்பனவாக அரசாங்கத்தின் திரண்ட நிதியிலிருந்து ரூபா 1,795,330,536 தொகையும், சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளைப் பரீட்சித்தல் கட்டணம் மற்றும் தகவல் | (i) அரசாங்கத்தின் பொதுவான பணிப்புரை மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக்குழுவின் பணிப்புரையைப் பின்பற்றுதல் தவிர்க்கப் படாதிருத்தல் வேண்டும். | விரல் அடையாளமிடும் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அந்த இயந்திரங்களைப் பொருத்துவதற்காக அளவீட்டு நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் இச்சிக்கலைத் தீர்த்து வைக்கலாம் என அவதானித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,087,341,531 தொகையுமாக ரூபா 2,882,672,067 மொத்த தொகையான செலவுகள் சம்பந்தமாக உறுதிப்படுத்துவதற்கான சான்றாக சேவைக்கு சமுகமளித்தமையை உறுதிப்படுத்துகின்ற விரல் அடையாளமிடல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ii. நிதி ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையில் மற்றும் நிதிப் பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.<br><br>iii. ஊழியர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை முறைமைப் படுத்துதல். | |
| (ஆ) | 2004 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட வரியைச் செலுத்தி வங்கிப் பிணையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத 16 சந்தர்ப்பங்கள் காணப்பட்டது என்பதாக அறிவிக்கப்பட்டிருந்தும் அக்காலப்பகுதியில் வங்கிப் பிணையின் அடிப்படையில் பொருட்களை விடுவிப்பதற்கு பதிவு செய்து கொண்ட எண்ணிக்கையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள எண்ணிக்கையும் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது சம்பந்தமான தகவல்களை விரைவாக கணக்காய்விற்கு அறிவித்தல் மற்றும் கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் | இது பற்றி விசாரித்துப் பார்த்த போது உறுதிப்படுத்தப்பட்டதானது பழைய அலுவலக வளவிலிருந்து புதிய அலுவலக கட்டிடத்திற்கு பொருட்களை எடுத்துச் சென்றதன் பின்னர் உரிய பதிவேடு அல்லது கோவை தொடர்பான தகவல்கள் இல்லை என்பதாகும். அது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்ற 4,059 இலங்கையர்களால் லக்சிறி சேவா நிறுவனத்தினூடாக பயணிகளுடன் எடுத்து வரப்படாத பயணப் பொதி (UPS) சேவை வசதியைப் பெற்றுக் கொண்டிருந்ததுடன் மேலும் 8240 பயணிகள் பரிசு (Gift) சேவை வசதிகளையும் | திணைக்கள கட்டளை 790 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். DOPL-790 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான அறிக்கைகளை வைத்துக் கொள்ள | UPB அல்லது பரிசாக அனுப்பப்படுகின்ற பொருட்கள் வெளிநாடு சென்ற பயணிகளின் தனிப்பட்ட பாவனைக்காக எடுத்து வருவதுடன் அனேகமாக அவை பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத பொருட்களாக இருப்பதுடன் அப்பொருட்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றிருந்தனர். அதில் இலங்கை சுங்கத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 17,625,020 மற்றும் ரூபா 31,840,355 ஆகும். எனினும், பயணிகளுடன் எடுத்து வரப்படாத பயணப் பொதி (UPB) மற்றும் பரிசாக (Gift) அனுப்பப்படுகின்ற இப்பொருட்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக விற்பனை இன்வொயிஸ் அல்லது ஏனைய எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டது என்பதற்கு சான்றுகள் காணப்படவில்லை. பொருட்களின் சுங்கப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்காக திணைக்கள கட்டளை (னுழூடு) 790 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது சுங்க உத்தியோகத்தர்கின் விருப்பின்பிரகாரம் பொருட்களை மதிப்பீடு செய்தல் இடம்பெற்றிருந்தது. இதன் காரணமாக உள்ளபடியாகக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைத்துள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வேண்டியதுடன் அவற்றை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | அவர்களிடம் விற்பனை இன்வொயிஸ் அல்லது ஏனைய ஆவணங்கள் இருக்கவில்லை. அப்பொருட்களைப் பரீட்சித்து பெறுமதியை மதிப்பீடு செய்தல் அல்லது வகைப்படுத்தல் செய்தலானது 08 ஆண்டுகள் அளவான சேவைக்கால அனுபவம் உள்ள உதவி கட்டண உத்தியோகத்தர்களாலும் 25 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைப் போல மதிப்பீட்டுக் கடமைகளில் அனுபவமுள்ள சுங்க அத்தியட்சகர்களின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது. அவ்வாறே பிரதி சுங்கப் பணிப்பாளரினதும் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) | லக்சிறி சேவா நிலையத்தினூடாக UPB Warehouse) நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பயணப் பொதிகள் / பொருட்களுக்கு மத்தியில் நிர்ணயிக்கப்பட்ட வரியினைச் செலுத்தாத மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றப்படாமையின் காரணமாக தற்காலிகமாக | திணைக்கள கட்டளை 790 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டது என்பதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 2020.02.01 ஆந் திகதியிலிருந்து அப்பொருட்களை விடுவிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் இலக்கத்தை பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்படாதிருந்த பொருட்களை மீண்டும் விடுவிக்கும் போது உரிய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டது எனக் காட்டும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (உ) | 2019 சனவரியிலிருந்து மே மாதம் வரை ரேன்க் கொள்கலன் நிலையத்திற்கு (RCT) 49,910 கொள்கலன்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 44,305 கொள்கலன்கள் நிலையத்திற்கு வெளியே (Out Panel) பரீட்சிக்கப்பட்டன. 5605 கொள்கலன்கள் RCT நிலையத்தினுள் ஸ்கேன் பரிசீலனை செய்யப்பட்டது. நிலையத்திற்கு வெளியே பரீட்சிக்கப்பட்ட 44,305 கொள்கலன்கள் சுங்க கட்டளைச்சட்டம் மற்றும் திணைக்கள கட்டளைகளின் (DOPL) பிரகாரம் பரீட்சிக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்கள கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டது என்பதற்கான அறிக்கைகளைப் பேணுதலும் அவற்றினை வேண்டுகையில் சமர்ப்பித்தலும் | அனைத்து கொள்கலன்களையும் பரீட்சித்தல் மேற்கொள்ள முடியாதுள்ளது. உரிய நிலையத்துக்கு கொள்கலன்கள் ஒரே தடவையில் வருகை தராததுடன் அவை அவ்வவ்போது நிலையத்திற்கு கொண்டு வரப்படுகின்றது வெளியில் பரீட்சிப்பதற்காக (Out panel) அனுமதி கிடைத்துள்ளதானது இறக்குமதியாளர்களின் கடந்த கால தகவல்கள், இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் தன்மை, ஆபத்து முகாமைத்துவ பிரிவின் (Risk Management Unit) ஆபத்துக்களை கட்டுப்படுத்தும் முறைமைக்கு இணங்கியிருத்தலினாலாகும். இக்கொள்கலன்களில் ஒரு பகுதி RCT நிலையத்துக்குள்ளேயேயும் பரீட்சிப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அப்பரிசீலனை சான்றிதழின் அடிப்படையில் மிகுதியான கொள்கலன்களின் அளவினை வெளிப் பரீட்சிப்பிற்கு (Out panel) விடுவிக்கப்பட்டது. விசேடமாக ஏனைய நிறுவனங்களை சான்றுப்படுத்துவதற்குத் தேவைப்படுகையில் பிணையின் அடிப்படையில் கொள்கலன்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | வெளிப்பரீட்சிப்பதற்கு விடுவிக்கப்பட்டது. வெளிப்பரீட்சிப்பின் போது அனைத்து கொள்கலன்களையும் ஒரே தடவையில் பரீட்சிக்க முடியாததுடன் தெரிவு செய்யப்பட்ட எழுமாந்தமான கொள்கலன் அளவுகள் மாத்திரம் பரீட்சிக்கப்படுகின்றன. |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் கேள்வி கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியை மதிப்பீடு செய்த முறைமையைக் காட்டும் எழுத்து மூல சான்றுகள் எதுவும் உரிய பிரிவில் இருக்கவில்லை. அதற்கிணங்க உரிய வரிப் பணம் சரியாகக் கணிக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிக்க முடியாதுள்ளது. | திணைக்கள கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டன என்ற அறிக்கைகளை வைத்திருத்தல் மற்றும் அவற்றினை வேண்டுகையில் சமர்ப்பித்தல். | கேள்விகளைக் கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியைத் தீர்மானித்தலானது அக்காலத்தின் போது உரிய பொருட்களின் சந்தைப் பெறுமதியையும் இணைய தளங்களினைப் பரீட்சித்து அப்பொருட்களின் பெறுமதியையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு இடம்பெறுகின்றது. சில சந்தர்ப்பங்களில் உரிய பொருட்களுக்காக அண்மித்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுங்கம் பதிவு செய்துள்ள ஆசிகுடா தரவு களஞ்சியங்களிலிருந்து பரீட்சித்து உரிய பெறுமதிகளிலிருந்து பொருட்களின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்காக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| (எ) | 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 யூன் 30 ஆந் திகதி வரையான 4 ½ ஆண்டுகள் காலத்திற்கு இலங்கை சுங்கத்தின் சுங்க புலனாய்வினூடாக ரூபா 33,845,962,239 தொகையான ஒட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் | கணக்கு நடவடிக்கைகளைப் பரீட்சிக்க கூடிய வகையில் அறிக்கைகள், ஆவணங்களை முறையாகப் பேணுதல். | ECCR தகவல் முறைமை சம்பந்தமான உங்களின் அவதானிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் இது தொடர்பாக தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக உரிய பிரிவுகளுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட தண்டப்பண வருமானம், விற்பனை வருமானம், பறிமுதல் செய்தல் வருமானம் அல்லது சுங்கத் தீர்வைகள் மற்றும் ஏனைய வருமானங்களைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பொருட்களின் பெறுமதி, அப்பொருட்களின் பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்ட முறைமையும் இழக்கப்பட்ட சுங்கத்தீர்வை வருமானமும் முதலியவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் இலங்கைச் சுங்கத்தின் எப்பிரிவினாலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் ரூபா 2,725,768 கூட்டுமொத்தமான 28 கொடுப்பனவு வவுச்சர்கள் 2020 யூன் 16 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கொடுப்பனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக இந்த வவுச்சர்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது. |

**1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்பட்டு வருகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிப்பிரிவு தொடர்பாக நி.பி 135 இன் கீழ் அதிகாரத்தை ஒப்படைத்தல், கொடுக்கல்களை சில உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் கடமைகளை ஒப்படைத்தல் ஆகிய நிதிக் கட்டுப்பாடுகளுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை |

| | |
|---|---|
| சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத்தன்மையை உரிய காலத்தில் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை விளைதிறனாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். மேலும், அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தயாரித்து பேணப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

**1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (ஊ) அட்டவணை | 5,103,000 | லக்சிறி மற்றும் ட்ரைகோ சேவை நிலையங்களினால் பேணப்பட்டு வந்த இணைக்கப்பட்ட குதங்களில் கடமைகளில் ஈடுபடும் வகையில் இலங்கை சுங்கத்தினால் நிரந்தரப் பதவியணியின் 31 உத்தியோகத்தர்களும் பதில் வேலைப் பதவியணியின் 12 உத்தியோகத்தர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தும் 12 பதில் வேலைப் பதவியணியினர்களை சேவையில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடல். | லக்சிறி சேவை நிலையத்தின் மூலம் பேலியகொடை கிளைக்கு மேலதிகமாக நிந்தவூரில் அமைந்துள்ள கிளையின் மூலமாகவும் பொருட்களை விடுவித்தல் இடம் பெறுகின்றது. அந்த விடுவிப்பு நடவடிக்கைக்காக இணைத்துக் கொள்ளப்படுவது பேலியகொட கிளையின் பதவி யணியினர்களாகும். முழுமையான நிரந்தர பதவியணியினர்கள் 16 ஆக இருந்தும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஈடுபடுத்துவதற்காக அறவிட வேண்டிய மேலதிக வேலைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | பொருட்களை பரீட்சித்தல் இடம்பெறுவது அப்பதவியணியில் உள்ள 07 உதவி கட்டண உத்தியோகத்தர்களினாலாகும். அவர்கள் 03 நாட்கள் நிந்தவூரில் அமைந்துள்ள கிளையின் சேவைக்காகவும் இணைத்துக் கொள்ளப் படுகின்றார்கள். எனவே பதில் வேலைப் பதவியணியினர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ---------------------------------------------- | | | | |
| (i) | XIV ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 159,600 | சொந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக பயணம் செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அதில் காட்டப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பயணச் செலவுகளையும் சொந்த வேலை நிலையத்திலிருந்து கடமைக்காக வெளியில் இருந்த காலத்திற்காக உதவிப் பணம் மற்றும் தங்குமிடத்திற்கான இணைந்த செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கான படிகளையும் செலுத்துதல் வேண்டும். எனினும், இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்களுக் | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக கொடுப்பனவு இடம்பெறாதிருத்தல் மற்றும் செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீண்டும் அறவீடு செய்தல். | இலங்கை சுங்கத்தின் வல்வெட்டித்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை சுங்க அலுவலகத்தில் பல்வேறு நடவடிக்கைகளைப் பரீட்சிப்பதற்காக சில உத்தியோகத்தர்கள் பங்குபற்ற வேண்டிய சந்தர்ப்பங்களின் போது முற்பணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு உரிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கு மேற்கூறிய பிரிவுகளுக்கு முரணாக கடமைப் பயணங்களை மேற்கொண்ட 06 சந்தர்ப்பங்களின் போது அவர்களின் செலவுகளைத் தீர்த்து வைப்பதற்காக செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி | - | கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள சுங்க பதவியணியினைச் சேர்ந்த உத்தியோகத்தர் களுக்காகப் பேணப்பட்டு வந்த 06 வருகைப் பதிவேடுகள் நாளாந்த பதவிநிலை உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | பயணிகள் சேவைப் (கட்டுநாயக்கா) பிரிவில் பேணப்பட்டு வருகின்ற வருகைகளையும் வெளிச்செல்லலையும் பதிவு செய்கின்ற பதிவேட்டினை முறையாகப் பேணுவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அது சுங்கப் பணிப்பாளரினாலும் (பயணிகள் சேவை) பிரதி சுங்கப் பணிப்பாளராலும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. |
| (iii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆவது பந்தி | 3,925,507 | 01 ஆண்டிற்கு குறைந்த ரூபா 2,858,634 தொகை, 02 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கு மிடையேயான ரூபா (1,600) தொகை, 4 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்குமிடை யேயான ரூபா 5,685 தொகை மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,062,789 தொகைகளான ஓய்வு பெற்றுச் சென்ற | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 01 ஆண்டிற்கு குறைந்த கடன் மீதிகளுக்குரிய உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் அளித்தல் பத்திரம் வழங்குதலானது முடிவடைந்திருக்க வில்லை. எவ்வாறாயினும், 2020-06-29 ஆந் திகதி வரை அக்கடன் மீதியிலிருந்து ரூபா 1,038,029.08 தொகை அறவீடு செய்யப் பட்டுள்ளது. 02 ஆண்டு களுக்கும் 03 ஆண்டு களுக்கும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | இடைப் பட்டதான ரூபா 1,600 தொகையை 2020 ஆம் ஆண்டுக்குள் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| | | 1,587,019 | (ii). வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகுளுக்கும் இடைப்பட்ட ரூபா 68,800 தொகையும் 04 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 106,220 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,411,999 தொகையுமான கடன் மீதிகள் காணப்பட்டன. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்குரிய விபரத்தை தேடிக்கண்டு பிடிப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டிருந்தும் சில நபர்களின் கோவைகளை தேடிக்கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்தது. வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தகவல்களைத் தேடிக்கண்டு பிடிப்பது சிக்கலாக உள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------- | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 755 | - | லக்சிறி சேவை நிலையம், ட்ரைகோ சேவை நிலையம் | நிதிப்பிரமாணம் 755 இன் பிரகாரம் நடவடிக்கை | லக்சிறி மற்றும் ட்ரைகோ சேவை நிலையங்களுக்காக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (UPB Warehouse) மற்றும் கட்டுநாயாக்கா விமானச் சரக்கு விடுவிப்பு நிலையம் (Air cargo) என்பவற்றிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள சுங்க உத்தியோகத்தர்கள் ஒரு கலண்டர் ஆண்டுகள் பல தடவைகள் மாற்றம் செய்யப்பட்டிருந்தும் பொருட்களை பாதுகாக்கும் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் அவ்வாறு மாற்றம் செய்யும் சந்தர்ப்பங்களின் போது எழுத்து மூலம் பொருட்களை ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் இடம்பெற்றிருக்கவில்லை. | எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. கட்டுநாயக்கா விமானச் சரக்குகளை விடுவிக்கும் நிலையத்தின் பதிலின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் பதலீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்புக்களை ஒப்படைக்கும் போது பொருட்களைப் பரீட்சித்ததன் பின்னர் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தரி டமிருந்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 755 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) | (i) 1,508,000 | ஏதாவது விசேட செயற்பாட்டிற்காக வழங்கக்கூடிய செயல் நிமித்த உபகட்டுநிதியின் உச்ச எல்லை ரூபா 100,000 ஆகக் காட்டப்பட்டுள்ளது. எனினும், இலங்கை சுங்கம் மேற்கூறிய ‘‘ஏதாவது விசேட விடயத்தை முன்னிட்டு’’ என பிழையாக விளக்கமளித்து ஒரே செயற்பாட்டிற்காக உச்ச அளவினை மிகைத்து உபகட்டு நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. அதன் போது ஒரு | சுற்றறிக்கைக்கு முரணாக பணக் கொடுப்பனவை அங்கீகரித்து சிபார்சு செய்த மற்றும் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரினை விட அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் அவ்வாறு கணக்கீட்டு உத்தியோகத்தரின் சிபார்சு அல்து திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,508,000 தொகையான செயல் நிமித்த உபகட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii). 1,000,000 | செயல் நிமித்த உபகட்டுநிதி ரூபா 1,000,000 இனை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் அதற்காக போதியளவான விடயங்களுடன் கணக்கீட்டு உத்தியோகத்தரின் சிபார்சுடனான வேண்டுதலின் மூலம் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதியினைப் பெறுதல் வேண்டும். எனினும், அதற்கு முரணாக 2019 ஆம் ஆண்டிற்காக இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான வாகனத்திற்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக | சுற்றறிக்கைக்கு முரணாக பணக் கொடுப்பனவை அங்கீகரித்த சிபார்சு செய்த மற்றும் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கூட்டுறவுச் சங்கத்திற்கும் தனியார் துறைக்கும் ரூபா 1,000.000 தொகையான செயல்நிமித்த உபகட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| | | 549,854 | 17 உத்தியோகத்தர் களால் ரூபா 1,290,000 தொகை செயல் நிமித்த உப கட்டுநிதியாகப் பெற்றுக் கொண்டு அதில் எஞ்சியுள்ள பணத்தை வேலை செய்யும் 04 நாட்களிலிருந்து 227 நாட்கள் வரையான காலம் கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (iii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப்பிரமாணம் 371(5) | 2,700,827 | உப கட்டுநிதி வழங்கியதன் பின்னர் உரிய நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டினை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியானது கணக்கு பிரிவிற்கு மீண்டும் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் செயல் நிமித்த உப கட்டுநிதியைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களால் 25 சந்தர்ப்பங்களின் போது உப கட்டுநிதிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. அத்தாமத காலம் 25 நாட்களிலிருந்து 234 | உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நாட்கள் வரையிலான வீச்சுடையது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை<br>---------------------------- | | | | |
| | நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2004 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 118 ஆம் இக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1:1:6 மற்றும் 1:1:7 ஆம் பந்திகள் | 114,126 | உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களங் களுக்கிடையே தீர்த்து வைக்கப்படாத கடன் மீதிகள் இருக்காமைக்கு கவனத்திக் கொள்ள வேண்டிய போதிலும், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்கடந்திருந்தும் தீர்த்து வைக்கப்படாத கடன் மீதிகள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இக்கடன் மீதிகளை அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கிலிருந்து நீக்குவதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் 2020 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்படுகின்ற கணக்கில் உரிய செம்மையாக்கல்களைப் பதிவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (உ) | 2010 மே 22 ஆந் திகதிய PF 443 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | 500,000 | பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்படு மூலதன சிக்கலைக் குறைப்பதற்கான பரிகாரமாக அரசாங்க நிறுவனங்களின் எரிபொருள் தேவைப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் போது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக இலங்கை சுங்கத்தினால் தனியார் எரிபொருள் நிரப்பு | சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்த தரப்பினர்களுக்கு தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் சுங்கத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட 07 வேன்களுக்காக எரிபொருளாக சுப்பர் டீசல் ஈடுபடுத்த வேண்டுமெனத் தெரியப்படுத்தப் பட்டிருந்ததுடன் MARKFED இற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுப்பர் டீசல் இல்லாததனால் C.F.De Mel & Sons நிறுவனத்தின் மூலம் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றது. இலங்கை சுங்கத்தின் மோசடியான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நிலையங்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வைப்பாக வைத்திருப்பதற்கு ரூபா 500,000 பணம் செயல் நிமித்த உப கட்டுநிதியின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கையின் காரணமாக MARKFED நிறுவனம் எரிபொருள் வழங்குவதனை நிறுத்தியதன் பின்னர் C.F.De Mel & Sons நிறுவனத்தால் எரிபொருளை வழங்குவதற்கு வைப்புப் பணத்தை ரூபா 500,000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | சுங்க திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கை (DOPL) | | | | |
| (i) | 790 ஆம் இலக்க (DOPL) (02) ஆம் பந்தி | 605,796,308 | 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை தரல் நிலையத்தினூடாக விமானப் பயணிகளை கொண்டு வந்திருந்த ரூபா 605,796,308 மதிப்பீட்டுப் பெறுமதியான பொருட்கள் தொடர்பான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை. மேலும், பெறுமதியை உறுதிப் படுத்துவதற்காக 790 ஆம் இலக்க சுங்க உள்ளகச் சுற்றறிக்கையின் (02) ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்ததாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிக் காணப்பட்ட மேற்கூறிய | உரிய தகவல்களை சரியாகப் பெற்றுக் கொள்ளலும் பேணுதலும் இடம்பெறுதல் வேண்டும். | விலையைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டுப் பிரிவில் பொருட்களின் பெறுமதி தொடர்பான தரவு அடிப்படையாகக் கொள்ளப்படுவதுடன் பிரதான உதவி கட்டண உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்த நடவடிக்கை இடம்பெறுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பொருட்களுக்குரிய கொள்வனவு செய்தல் பற்றுச்சீட்டு, விற்பனை செய்தல், இன்வொயிஸ், பொருட்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு அல்லது வெளிநாட்டு நாணய மாற்றினை அனுப்புவதற்குரிய தகவல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ii) | இலக்கம் 790 (DOPL) (04) ஆம் பந்தி | - | கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகை நிலையத்தினூடாக பயணிகள் எடுத்து வருகின்ற வணிகத் தன்மையான பொருட்களின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்காக இலங்கை சுங்கத்தின் மதிப்பீட்டுப் பிரிவினால் பராமரிக்கப்படுகின்ற பெறுமதிகள் தொடர்பான தரவு முறைமையை அடிப்படையாகக் கொண்டு சுங்க உத்தியோகத்தர்களால் தங்களது விருப்பின் பிரகாரம் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உரிய தகவல்களை சரியாகப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பேணப்படுதல் இடம்பெறுதல் வேண்டும். | விலையைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டுப் பிரிவின் பொருட்களின் பெறுமதி தொடர்பான தரவு முறைமை அடிப்படையாகக் கொள்ளப்படுவதுடன் பிரதான உதவி கட்டண உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்த நடவடிக்கை இடம்பெறுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 நிலுவையாகவுள்ள வருமானங்களைச் சேகரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்தமான நிலுவைப் வரிப் பெறுமதி ரூபா 22,933,854,691 தொகையானதுடன் அவற்றில் 28 சதவீதம் அல்லது ரூபா 6,370,798,202 தொகையான இறக்குமதி நிலுவை வரிகளையும் 28 சதவீதம் அல்லது ரூபா 6,044,842,097 தொகையான நிலுவையான பெற்றோலிய உற்பத்தி வரிகளையும் 20 சதவீதம் அல்லது ரூபா 4,488,152,878 தொகையானது விசேட வணிகப் பொருட்கள் வரிகளையும் 13 சதவீதம் அல்லது ரூபா 2,870,623,881 தொகையான நிலுவையான முறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிகளையும் 7 சதவீதம் அல்லது ரூபா 1,716,039,908 தொகையான நிலுவையான இறக்குமதி செஸ் வரிகளையும் 6 சதவீதம் அல்லது ரூபா 1,314,930,120 தொகையான மோட்டார் வாகன உற்பத்தி வரி வருமானங்களையும் உள்ளடக்கியிருந்தன. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 62 சதவீதம் அல்லது ரூபா 14,330,919,797 தொகையானது | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையில் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். உரிய நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தி மேற்கூறிய நிலுவை வரி வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் நிலுவை வரிப் பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்து வதுடன் 38 சதவீதம் அல்து ரூபா 8,602,934,893 தொகையானது கடந்த 10 ஆண்டுகள் காலமாக நிலுவையாக இருந்த மீதி என்பது அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | ஒட்டுமொத்த வரி வருமானத்தில் 26 சதவீதம் அல்லது ரூபா 6,044,842,097 தொகை 2019 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய பொருட்கள் வரி வருமானமாகக் காணப்பட்டதுடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வரி செலுத்தாது விடுவிக்கப்பட்ட எரிபொருட்களுக்குரிய நிலுவையாகக் காணப்பட்ட மீதியாகும். | நிதிப் பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். உரிய நிறுவனத்திற்குத் தெரிவித்து மேற்கூறிய நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல் வருமானத்தின் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,630,549,991 மீதியானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல்களாக ஒரு வருமானத் தலைப்பு அல்லது ஒரு பெறுவனவுத் தலைப்பு இருக்கவில்லை. இதில் காட்டப்பட்டுள்ள மீதியை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. விபரத்தை தர முடியுமாயிருந்தால் விளக்கமளித்தலை மேற்கொள்ள முடியும். |
| (உ) | 2015 யூலை 20 ஆந் திகதிய திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வருமானத்தை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், மற்றும் அறிக்கையிடுதலைப் | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | பதில் வழங்கப்படவில்லை. |

போல் நிலுவை வருமானங்களைச் சேகரித்தலும் அறிக்கையிடுதலும் சம்பந்தமாக போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 வருமானங்களைச் சேகரித்தல்**

மீளாய்வாண்டின் போது 13 வருமானக் குறியீடுகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 862,815,000,000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 72 சதவீதம் அதாவது ரூபா 619,458,070,988 ஆகும். எதிர்பார்த்த வருமான மட்டத்தை அடைந்து கொள்ள முடியாத வருமான குறியீடுகளுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வருமான பெறுவனவுகள் | | |
| மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தினால் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல் வரி, இறக்குமதி செஸ் வரி, ஏற்றுமதி செஸ் வரி, விசேட வணிகப் பொருட்கள் வரி, பெற்றோலிய உற்பத்தி வரி, மோட்டார் வாகன உற்பத்தி வரி, ஏனைய உற்பத்தி வரிகள், புடவைகளுக்கான உள்நாட்டு விற்பனைகள் அடிப்படையிலான வருமானங்களாக சேகரிக்கப்பட்ட வருமானங்களை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 91,654,835,591 மொத்த தொகையினால் குறைவடைந்திருந்தது. | அரசாங்கத்தின் பிரதான வருமான சேகரிப்பாளராக மிகவும் சிறப்பாக குறிப்பிடத்தக்க அளவான முன்னேற்றம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல். | உங்களின் அவதானிப்பு சரியானதுடன் அந்த விடயங்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தினால் தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல் வருமான குறியீட்டின் கீழ் ரூபா 3,379,832,212 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் | முறையாக வருமானத்தைச் சேகரித்தலில் முன்னேற்றம் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுத்தல். | - மேற்படி - |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 2,505,775,132 தொகையினால் அல்லது 42.57 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 2.2 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.2.1 மீண்டுவரும் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) தொடக்க மற்றும் திருத்திய செலவு மதிப்பீடு<br>மீளாய்வாண்டின் போது 11 மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்குமிடையே (71) சதவீதத்திலிருந்து 632 சதவீதம் வரையான வீச்சுடை முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) செலவு விடய இலக்கம் 1101- உள்நாட்டு பயணச் செலவுகள் சம்பந்தமான தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் அவதானிக்கப் பட்டன. இதற்காகச் சமர்ப்பித்த காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியது என அவதானிக்கப்படாததுடன் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் | மதிப்பீட்டினை ஆழ்ந்த அறிவுடன் தயாரித்தல். | சுங்கத் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது உள்நாட்டுப் பயணங்களுக்காக (செலவு விடய இலக்கம் 1101 இன் கீழ்) ரூபா 42,000,000 அளவில் தேவை என தெரிவித்து அனுப்பப்பட்டிருந்தும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் மூலம் 2019 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | போது ஆழ்ந்த அறிவுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆண்டிற்காகவும் வழங்கப்பட்டது 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டு அளவான ரூபா 37,500,000 ஆகும். 2018 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு வவுச்சர்களில் ஒரு பகுதி 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மீளளிப்புச் செய்ய வேண்டிய ஏற்பட்டிருந்ததனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவானதாக இல்லாமையின் காரணமாக நி.பி 66 இன் கீழ் நிதிஏற்பாட்டினை மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ii) | செலவு விடய இலக்கம் 1203 உணவு மற்றும் சீருடை செலவுகள் சம்பந்தமான தொடக்க மற்றும் திருத்திய செலவு மதிப்பீடுகளுக்கிடையே 75 சதவீத முரண்கள் அவதானிக்கப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பம் வரை காணப்பட்ட மாதாந்த உணவு செலவுகளின் பிரகாரம் வருடாந்த தேவைப்பாடு ரூபா 33 மில்லியனாக இருந்தது. அது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படாது 2019 ஆம் ஆண்டிற்கான நிதிஏற்பாட்டுத் தேவைப்பாடு ரூபா 20 மில்லியனாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டினை ஆழ்ந்த அறிவுடன் தயாரித்தல். | செலவு விடய இலக்கம் 1203 இற்கான தொடக்க மதிப்பீடு ரூபா 40 மில்லியனானதுடன் ஆண்டின் போது ஏற்பட்ட தேவைப்பாட்டிற்காக மேலதிக நிதி ஏற்பாடு மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (iii) | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களில் குறிப்பிட்டு வழங்கப்பட்டிருந்த 2018 | சுற்றறிக்கைகளுக்கு இணங்க மதிப்பீட்டினைத் தயாரித்தல். | இத்திணைக்களத்தின் மீண்டுவரும் செலவுகளானது அடிப்படையாக சாதாரண நிருவாகச் செலவுகளின் கீழ் கொண்டுவரப்படுவதனால் |

| | | | |
|---|---|---|---|
| | யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பாதீட்டினைத் தயாரித்தல் வலியுறுத்தப்பட்டிருந்தும் இலங்கை சுங்கம் அது சம்பந்தமாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | முன்னைய ஆண்டுகளின் செலவுப் போக்கினையும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் கிடைத்துள்ள தகவல்களினையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்பார்த்தவாறு செவு செய்யும் தேவைப்பாடு உருவாகியிருக்காததனால் ஐயவினாவில் காட்டப்பட்டுள்ளவாறு நிதி ஏற்பாடு எஞ்சியுள்ளது. |
| (iv) | 2019 ஆம் ஆண்டின் போது நி.பி 66/69 வகைமாற்று நடைமுறையின் மூலம் நிதிஏற்பாடு மாற்றப் பட்டிருந்ததுடன் அதன் காரணமாக தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையேயான முரண் 70 சதவீதத்திலிருந்து 632 சதவீதம் வரையான பாரியளவிலான வீச்சினைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆழ்ந்த அறிவுடன் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வகையில் முடியுமான அளவு சரியாக மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிஏற்பாடு சேமிக்கப்படுதல்<br>------------------------------------------------<br>மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 2,782,500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 6.85 சதவீதமான ரூபா 190,675,880 தொகை செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. 09 செலவு விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக 7 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சுடைய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்களது வெளிநாட்டு பயணச் செலவுகளுக்காக செலவு விடயம் இலக்கம் 1102 இன் கீழ் ரூபா 4,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 149,100 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 3,850,900 அல்லது 96 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு பயணச் செவுகளானது சுங்க முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு பணத்திலிருந்து செலவு செய்தல் இச்சேமிப்பிற்கு காரணம் என கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆழ்ந்த அறிவுடன் மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். | சுங்க உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயணம் செலவுகளானது சுங்க முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவு செய்யப்படுவதுடன் சுங்க உத்தியோகத்தர்கள் அல்லாத ஏனைய சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் பயிற்சி தேவைப்பாடுகளுக்கான எதிர்பார்த்த வெளிநாட்டுப் பணங்களுக்கு இப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்தவாறு வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்படாததனால் இந்த ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனால் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். |
| (ii) | செலவு விடயம் இலக்கம் 1203 உணவு மற்றும் சீருடைகளுக்கான வருடாந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 70,000,000 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதிஏற்பாட்டுப் பணத்தில் ரூபா 13,338,684 அல்லது 19 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. உரிய செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு சேமிக்கப் பட்டிருந்தும் கொடுப்பனவு செய்யப்படாமை மற்றும் இப்பெறுமதிகள் மேற்கூறிய காலப்பகுதியில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் | சரியாக கணக்குகளைச் சமர்ப்பித்தல் இடம்பெறுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மூலம் வழங்கப்படுகின்ற உணவுகளின் தரம் சம்பந்தமாக உத்தியோகத்தர்களின் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் இது தொடர்பாக கலந்துரையாடியதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும் அது சம்பந்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான கூற்றில் (குறிப்பு III) பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உறுதியான தீர்மானத்திற்கு வருவதற்கு முடியாதிருந்ததனால் உரிய மாதத்திற்காக கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. தவறுகளின் காரணமாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு III) பதிவு செய்வதற்கு முடியாதிருந்தது என மேலும் தெரிவிக்கின்றேன். |
| (iii) | செலவு விடய இலக்கம் 1303 கட்டிடங்களையும் நிர்மாணங்களையும் பராமரித்தல் செலவுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 94,000,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 70 சதவீதம் அதாவது ரூபா 65,524,584 தொகையான நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்கள் அறிவிக்கப்பட்டிருந்தது. சேமிப்புக்களுக்கு எதிர்பார்த்தவாறு செலவுகள் ஏற்படாமையின் காரணமாக என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்செலவு விடயங்களின் கீழ் நடப்பாண்டிற்காக ரூபா 26,353,800 தொகை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு மேலும் தீர்த்துவைக்கப்பட வேண்டிக் காணப்பட்டது என நிதிக் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேலும் பொறுப்புக்களைத் தீர்த்து வைக்க வேண்டிக் காணப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு செலவுகள் உருவாகியிருக்காமையானது நிதிஏற்பாடு சேமிப்பதற்கு காரணம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளைச் சமர்ப்பித்தல் இடம்பெறுதல் வேண்டும். | இத்திணைக்களத்தில் காணப்பட்ட கோவைகளின் காரணமாக 2019 ஆம் ஆண்டில் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்துவதற்கு நிலுவைப் பணம் இருக்கவில்லை. கட்டுநாயக்கா விமான நிலைய சுங் உத்தியோகத்தர்களின் ஓய்வு நிலையத்தின் மேல் மாடியை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல், அதன் கட்டமைப்பை மாற்றம் செய்வதற்கு மீண்டும் பொறியியலாளர் அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமையின் காரணமாக இதனை 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தின் பிரதான கணனி முறைமையான ஆசிகுடா தகவல் முறைமையைப் பராமரித்தல், புனரமைத்தல், மேம்படுத்துதல், மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மத்தியில் செலவு விடய இலக்கம் 1032 இன் கீழ் ரூபா 1,327,575 தொகையும் செலவு விடய இலக்கம் 2001 இன் கீழ் ரூபா 100,000,000 தொகையான மொத்த நிதிஏற்பாட்டுப் பணமும் செலவு விடய இலக்கம் 2002 இன் கீழ் ரூபா 24,814,248 தொகையும் செலவு விடய இலக்கம் 2103 இன் கீழ் ரூபா 7,000,000 மொத்த நிதிஏற்பாட்டுப் பணமும் செலவு விடய இலக்கம் 2401 இன் கீழ் ரூபா 10,000,000 மொத்த நிதி ஏற்பாட்டுப் பணமும் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த அளவானது ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதம் முறையே 44, 100, 83, 100 மற்றும் 100 சதவீதங்களாகும். இச்சேமிப்பிற்காக எதிர்பார்க்கப்பட்டவாறு செலவுகள் உருவாகியிருக்காமை மற்றும் சுங்க முகாமைத்துவம் மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவு செய்தல் காரணம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆழ்ந்த அறிவுடன் பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இலங்கை சுங்கத்தின் கணனி வலையமைப்பு முறைமையை மேம்படுத்துவதற்காக 2001 செலவு விடயத்தின் கீழ் ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாட்டு அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அத சம்பந்தமான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர்களின் வேலைப் பழுவின் காரணமாக உரிய மாதிரி விளக்கம் மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (v) | செலவு விடய இலக்கம் 1403 (மின்சாரமும் நீரும்) இற்காக ரூபா 140,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 11 சதவீதம் அதாவது | ஆழ்ந்த அறிவுடன் பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். | செலவு விடய இலக்கம் 1403 (மின்சாரமும் நீரும்) இன் கீழ் நிதி ஏற்பாட்டினைச் சேமிப்பதற்கான காரணம் கொடுப்பனவுகளுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 15,990,572 தொகையான நிதி ஏற்பாடு சேமிப்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. இச்சேமிப்பிற்காக எதிர்பார்த்தவாறு செலவுகள் உருவாகியிருக்காமை காரணம் என குறிப்பிடப்பட்டிருந்தும் அச்செலவு விடயத்தின் கீழ் நடைமுறை ஆண்டிற்காக ரூபா 9,200,883, தொகை மேலும் தீர்த்து வைப்பதற்கு காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க செலவு விடயத்தின் கீழ் மேலும், தீர்த்து வைப்பதற்காக எஞ்சியுள்ள பணத்தில் 57 சதவீதத்திற்கு அண்மித்த பெறுமதியைக் கொண்ட ஒரு பொறுப்பு காணப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு செலவுகள் உருவாகியிருக்காமை சேமிப்பிற்கான காரணம் என குறிப்பிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள கூடிய விடயமல்ல. | | விலைப்பட்டியல்களை 2019.02.31 ஆந் திகதியில் சமர்ப்பிக்காமையாக திருத்த வேண்டும் எனத் தெரிவிக்கின்றேன். |
| (vi) | செலவு விடய இலக்கம் 1409 (சேவைகள் ஏனையவை) இற்காக வருடாந்த நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் ரூபா 488,000,000 ஆகும். அந்த நிதிஏற்பாட்டுப் பணத்தில் ரூபா 400,000,000 அல்லது 82 சதவீதம் கொள்கலன்களை ஸ்கேன் செய்தல் மற்றும் தேடிப் பார்ப்பதற்குரிய கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 345,350,000 தொகை நிதிப்பிரமாணம் 66/69 வகை மாற்று நடைமுறையின் கீழ் ஏனைய 08 செலவு | ஆழ்ந்த அறிவுடன் பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் கொள்கலன்களை ஸ்கேன் செய்யும் நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். | இச்செயற்திட்டம் தற்பொழுது பரீட்சித்து செயற்படுத்துதல் மட்டத்தில் காணப்பட்டதுடன் இதில் ஒரு நாளைக்கு பணம் செலுத்த வேண்டிய கொள்கலன்களின் அளவினை மேலும் குறைப்பதற்கு Rapiscan Systems (Pvt) Ltd. கம்பனி, நிதி அமைச்சு, மற்றும் இலங்கை சுங்கத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. (பல நடைமுறைச் சிக்கலின் காரணமாக 1100 கொள்கலன்களை ஒரு நாளைக்கு ஸ்கேன் (Scan) செய்வது சிக்கலானது என்பதனால்) இக்கலந்துரையாடல் |

விடயங்களுக்கு மாற்றுதல் இடம்பெற்றிருந்தது.

நிதிஏற்பாட்டினை மாற்றியதன் பின்னர் மேலும் 26 சதவீதம் சேமிப்புக்கள் அறிவிக்கப்பட்டிருந்தது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கலன்களை நூற்றுக்கு 100 வீதம் ஸ்கேன் செய்யும் செயற்திட்டம் கடந்த ஆண்டினைப் போல மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்துவதற்கு முடியாமையினால் இந்த வகையில் நிதிஏற்பாட்டினை மாற்றுவதனைப் போல நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்காக கேள்வி கோருதலானது 2015 நவம்பர் மாதம் இடம்பெற்றிருந்ததுடன் 2019 ஒக்தோபர் 21 ஆந் திகதி இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இச்செயற்திட்டத்தினை விரைவாக அமுல்படுத்துவதற்காக தேவையான செயற்பாட்டு நடவடிக்கைகள் தற்பொழுது வரை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்றது. ஒரு நாளைக்கு ஸ்கேன் செய்வதற்காக செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த கொள்கலன் அளவினைக் குறைத்து கம்பனிக்கு இதனால் ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக் கொள்வதற்காக உடன்படிக்கை காலத்தை நீடிக்கும் பரிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கந்துரையாடப்பட்டு வருகின்றது.

(இ) மூலதனச் செலவுகள்

------------------------------------

மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 358,450,000 தொகையில் 74.45 சதவீதமான ரூபா 266,866,994 தொகை செலவு செய்யப்படாது சேமிப்பாகக் காணப்பட்டதுடன் அது 09 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 10 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையிலான

சரியாக ஆழ்ந்த அறிவுடன் மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். கணக்காய்வினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து கொண்டுள்ளேன்.

வீச்சில் காணப்பட்டது. அவ்வாறே மூலதனச் செலவு விடய இலக்கம் 2104 (கட்டிடங்களும் நிர்மாணங்களும்) மற்றும் 2401 (பதவியணியினர் பயிற்சி) என்பவற்றின் கீழ் மீளாய்வாண்டில் நிதி ஏற்பாட்டுப் பணத்திலிருந்து முறையே 99.95 சதவீதம் மற்றும் 67.22 சதவீதம் சேமிப்புக்களாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இச்சேமிப்புக்களுக்காக சுங்க முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவு செய்ததன் காரணமாக எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஏனைய நிதியங்களின் மூலம் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக பரீட்சித்ததன் பின்னர் வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பொறுப்புக்கள் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்காமை | | |
| (i) 10 செலவு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,908,371 மொத்தமான பொறுப்புக்களின் பெறுமதி திறைசேரி அச்சுப் பிரதிகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகளை அறிக்கையிடுதல் இடம்பெறுதல் வேண்டும். | 269/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் மாதத்திற்கான குறைநிரப்பு கணக்குகளின் பொறுப்புக்கள் 2020-01-21 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | துடன் அத்திகதி வரை இனங்காணப்பட்ட பொறுப்புக்களின் விபரம் CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அத்தகவல்கள் SAG2 படிவத்தில் உள்ளடக்கப்படுகின்ற போதிலும் மாதாந்த கணக்கு பொழிப்புக்களை திறைசேரிக்கு அனுப்பியதன் பின்னர் இனங்காணப்பட்ட தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு iii இல் உள்ளடக்கப்பட்டது. |
| (ii) | 06 செலவு விடயங்களுக்குரிய பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (குறிப்பு iii) மற்றும் திறைசேரி அச்சுப் பிரதியில் (SA92) குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அந்த 06 செலவு விடயங்களுக்கு மத்தியில் 02 செலவு விடயங்களின் பொறுப்புக்கள் பெறுமதி திறைசேரி அச்சுப் பிரதியில் குறிப்பிட்ட பெறுமதியினை விட ரூபா 9,807,794 குறைத்தும் 04 செலவு விடயங்களின் பொறுப்புக்கள் பெறுமதி அச்சுப் பிரதியில் குறிப்பிட்ட பெறுமதியை விட ரூபா 33,120,648 அதிகரித்தும் அறிக்கையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியாக கணக்குகள் அறிக்கையிடப் படுதல் வேண்டும். | - மேற்படி - |
| (iii) | 02 செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 4,328,020 கூட்டுமொத்தமான பொறுப்புக்களின் பெறுமதி | திறைசேரி சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கு இணங்க | தவறுதலாக இப்பெறுமதி குறிப்பு III இன் கீழ் உள்ளடக்க முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரி அச்சுப் பிரதியில் (SA92) குறிப்பிடப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்கூற்றில் (குறிப்பு iii) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுத்தல். | |
| (ஆ) | நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளல் | | |
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் இலக்கம் 94(1) மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தினால் 02 செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 6,544,528 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படா திருத்தல். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கையானது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், இலங்கை சுங்கம் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையினை 2020 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கவில்லை.

## 3.2 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| இலங்கை சுங்கத்தின் தலைமை அலுவலக கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள commins வகையான மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் பராமரிப்பு நடவடிக்கைக்காக 2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ரூபா 3,512,574 தொகை ஒரு தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (அ) மேற்கூறி சேவைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் commins வகைக்காக இலங்கையில் இருக்கின்ற ஒரேயொரு முகவர் என்பதனால் அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது எனக் குறிப்பிட்டிருந்தும் மேற்கூறிய கம்பனிக்கு commins இற்கான இலங்கை முகவராகச் செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் 2018 சனவரி 16 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. எனினும், அது பற்றி கருத்தில் கொள்ளாது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையிள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக விலைமனுக்கோரல் மேற்கொள்ளப்பட்டு போட்டி நிறுவனங்களுக்கு இதற்காக முன்வருவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் மிகவும் பொருத்தமான நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வ தனூடாக மிகவும் சாதகமான வழங்குரைத் தெரிவு செய்வதற்கு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். | Trade Promoters (Pvt) Ltd. நிறுவனத்திற்கு commins பொருட்களுக்கான ஒரு முகவராகச் செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை ஒப்படைத்தல் 2018-01-16 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. Trade Promoters (Pvt) Ltd. நிறுவனத்திற்கு commins பொருட்களுக்காக முகவராகச் செயற்படும் இயலுமையானது அதிகார ஒப்படைப்பு முடிவடையும் திகதி அல்லது காலாவதியாகியதன் பின்னர் ஒரு ஆண்டு வரை ஆகிய இரண்டில் முதலில் வருகின்ற திகதி வரை உள்ளது என உரிய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள 2019.09.25 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிடுள்ளது. இம்மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்காக நடவடிக்கை எடுக்கும் போது போட்டி கேள்வி மனுக்கள் கோராது நேரடி ஒப்பந்த முறைமையின் மூலம் அந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | நிறுவனத்திடமிருந்து சேவை செய்தல் நிறைவேற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சுங்கத்தின் சுற்றாடல் முகாமையாளரினால் மேற்கூறிய சேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் விசாரிக்கப்பட்டது எனவும் உரிய மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கான உதிரிப் பாகங்களை சந்தையில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மின்சார சபையின் கொலன்னாவை இயந்திரப் பிரிவின் மூலம் இச்சேவைகளை உத்தரவாதத்துடன் குறைந்த விலைக்கு செய்து கொள்ளலாம் எனவும் மின்சார சபையினால் இலங்கை சுங்கத்தின் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும், இலங்கை சுங்கத்தின் முகாமைத்துவம் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன் இக்கடிதத்தை உரிய பெறுகைக் குழுவிற்கும் தொழில்நுட்பக் குழுவிற்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசாங்கத்தின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல். | மின்பிறப்பாக்கி இயந்திரத்தை மீண்டும் ஸ்தாபிக்கும் போது காணப்படுகின்ற இயலளவை கொண்ட மின்பிறப்பாக்கி இயந்திரம் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. நேரடி கொள்வனவு செய்தலின் கீழ் இச்சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால் மாதிரி விளக்கங்களை மீளாய்வு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | சேவை வழங்கல்கள் பணிப்பாளரினால் மின் பிறப்பாக்கி இயந்திரத்தினைப் பரீட்சித்துப் பார்த்து விலைகளைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு தெரியப்படுத்தியமைக்கான கடிதம் உரிய கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்தும் அக்கடிதம் தபாலில் / பதிவு செய்த தபாலில் / பெக்ஸ் மூலம் / கைகளால் மின்சார | அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடனும் உறுதிப்படுத்தும் வகையிலும் மேற்கொள்ளல். | மின்சார சபைக்கு விடுவிக்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் அந்த நிறுவனத்தினால் சுங்க பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து மின்சார பிறப்பாக்கி இயந்திரம் அவதானிக்கப்பட்ட போதிலும், அதற்காக விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. சில |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு அனுப்பி வைக்கப் பட்டமைக்கான எதுவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே மின்சார சபையிடமிருந்து இது தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | சந்தர்ப்பங்களில் விசாரிக்கப்பட்டிருந்தும் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குரிய பராமரிப்பு பொறியியலாளரினால் ரேடியேட்டரில் ஏற்பட்டிருந்த சிறிய நீர்க்கசிவு தொடர்பாக வழங்கல் சேவை பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப் பட்டிருந்ததுடன் அதற்கிணங்க புதிய ரேடியேட்டரினைக் கொள்வனவு செய்வதற்கு Trade Promoters நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க,<br>• நாளாந்த பரீட்சிப்பின் போது இந்த சிறிய நீர்க்கசிவினைத் தடுப்பதற்கான பரிகாரம் ஈடுபடுத்தப்படாமை.<br>• திருத்தம் செய்வதற்கு உள்ள இயலுமையினை ஆராய்ந்து பார்க்கப்படாமை.<br>• ரேடியேட்டரிலுள்ள சிறிய நீர்க்கசிவினை தெரியப்படுத்துவதுடன் புதிய ரேடியேட்டரினை கொள்வனவு செய்வதற்கு Trade Promoteசஎ நிறுவனத்தினால் விலைமனுக்கள் சமர்ப்பித்தல்.<br>• Trade Promoters நிறுவனத்தின் முறைப்பாட்டு இலக்கம் 01 ரேடியேட்டர் பரீட்சிக்கப்பட்டது என்பதற்கு அல்லது அந்த நிறுவனத்திற்கு இது தொடர்பாக | அரசாங்கத்தின் செயற்பாடுகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும் உறுதிப் படுத்தும் வகையிலும் மேற்கொள்ளல். | மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் ரேடியேட்டரில் அந்த நீர்க்கசிவு அவதானிப்பதற்கு முன்னர் இரண்டு தடவைகள் திருத்தம் செய்யப்பட்டன. இயந்திரங்களில் பிழைகள் அவதானிக்கப்பட்ட உடன் திணைக்களத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக பேணிச் செல்ல வேண்டியிருப்பதனால் உரிய நிறுவனத்திற்கு தொலைபேசி அழைப்பினூடாக தொடர்பு கொண்டு அந்த நிறுவன்தின் முகவரை தொடர்புபடுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் உருவாகின்ற சிக்கலைக் குறைப்பதற்காக சேவை உடன்படிக்கையின் தேவைப்பாட்டினைக் கவனித்துப் பார்த்து அதற்காக பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | தெரியப்படுத்தப்பட்டது என்பதற்கு அல்லது விலைமனுக்கள் விசாரிக்கப்பட்டது என்பதற்கான எதுவித சான்றும் கோவைகளினூடாக சமர்ப்பிக்கப்படாமை.<br>• ரூபா 2,190,741 செலுத்தி மேற்கூறிய நிறுவனத்தின் மூலம் ரேடியேட்டரினை மீண்டும் பொருத்துவதற்காக பெறுகைகள் மேற்கொண்டு 03 மாதங்களின் பின்னர் மீண்டும் ரூபா 1,321,833 செலுத்தி மேற்கூறிய நிறுவனத்துடன் சேவை உடன்படிக்கையினை செய்து கொள்வதற்கு பிரேரித்து அந்த நிறுவனமே விலை மனுக்களை அதனுடன் சமரப்பித்திருந்தமை முதலியன கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாகும். | | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைவழிகாட்டிக் கோவையின் 2:4.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறுகைச்செயற்பாடுகள் முழுவதற்கும் பொறுப்புக் கூற வேண்டிய போதிலும், இப்பெறுகை நடைமுறையின் போது மேற்கூறிய செயற்பாட்டின் போது அவ்வாறான நடைமுறைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி மதிப்பீட்டுச் சபையின் பொறுப்பினை சரியாக மேற்கொள்ளல். | மின்சார முறைமையின் திடீர் மின் துண்டிப்புக்களின் போது மின்பிறப்பாக்கி இயந்திரங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளை கவனத்தில் கொண்டு பொறுப்பற்ற நிறுவனங்களுடன் நடவடிக்கை எடுக்க முடியாததனால் அந்த முகவர் நிறுவனத்தினாலேயே அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஊ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2:8:4 ஆம் பிரிவின் பிரகாரம் இது சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றல். | கேள்விகள் கோரப்படாது ஒரு முகவர் நிறுவனத்திடம் இச்சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது பெறுகைத் தீர்மானத்திற்காக திணைக்கள பெறுகைக் குழு இணக்கப்பாட்டினை மாத்திரம் வழங்கியிருந்தது. |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதியாக பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்று அதற்காக ஒரு நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் சுங்க வெகுமதிப் பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட 1988 சனவரி 28 ஆந் திகதிய பீஎல்118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. அதற்கிணங்க 1999 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான 21 ஆண்டுகளில் வெகுமதிப் பணமாக ரூபா 17,745,558,715 செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரின் அங்கீகாரத்தினைக் காட்டுகின்ற நடைமுறையை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல். அங்கீகரித்த நடைமுறை இல்லாதுவிடின் அவ்வாறு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 1956 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுங்க கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் மூலம் வெகுமதிகளைச் செலுத்தும் பொறிமுறை தொடர்பாக உறுதியாகக் காட்டப்பட்டிருந்தது. சுங்க கட்டளைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் கீழ் கிடைக்கின்ற நலன்முறைமையானது சுங்க வரலாற்றில் நீண்ட காலமாக அமுல்படுத்தப்படுகின்றது. திணைக்கள கட்டளை (DOPL) 118 ஆனது செல்லுபடியான அதேபோல் செயற்திறனான மற்றும் நிறைவேற்றப்படக் கூடிய ஆவணம் என்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் குணதிலக எதிர் வீரசேன வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சுங்கத்திற்கு வெளிப்படுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட போலியான செஸி இலக்கத்துடனான Toyota Land Cruiser Prado (TRJ 150) வாகனம் சுங்க புலனாய்வின் மூலம் பறிமுதல் செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் 02(எ) மற்றும் (ஏ) பிரிவுகளுக்கு முரணாக புதிய சுங்கப் பதிவும் புதிய செஸி இலக்கமும் வழங்கப்பட்டு ரூபா 13,500,000 மதிப்பீட்டுப் பெறுமதிக்கு பொருளாதார விவகார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. | சுங்கப் பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் ACT/02/CC இலக்க 2006 நவம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறான எழுத்து மூல சட்டம் சம்பந்தமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை என அவதானித்துள்ளேன். அதற்கிணங்க மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் சட்டரீதியான ஏற்பாடு இல்லாது மேற்கூறிய வாகனத்தை பதிவு செய்தல் சம்பந்தமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் விசாரித்தல் வேண்டும். இலங்கை சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்திற்காக புதிய வாகன இலக்கமும் செஸி இலக்கமும் வழங்கி மீண்டும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பதிவு செய்தலின் சட்டரீதியான ஏற்பாடு தொடர்பான அறிவு எங்களிடம் இல்லாததுடன் அமைச்சரவையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) கட்டுநாயக்கா பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருகை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுங்க அலுவலகத்தில் வெளித்தரப்பினர்களுக்கு இலகுவாக வருகை தர முடியாத மற்றும் காட்சிப்படுத்தாத வகையில் தயார்ப்படுத்தப்பட்ட ஒரு | கணக்காய்வு அவதானிப்பினை மேற்கொண்ட சந்தர்ப்பத்தின் போது விடயத்தை வெளிப்படுத்தாது பின்னர் சமர்ப்பித்த விடங்களை கணக்காய்வில் ஏற்றுக் கொள்வது சிக்கலானதாகும். | அலுமாரியினுள் இருந்த பணம் இம்மாதம் ஓய்வு பெற்றுச் செல்லுவதற்கு இருந்த சிரேஸ்ட பதவிநிலை உத்தியோகத்தரின் பிரியாவிடை வைபவத்திற்கு மற்றும் நீண்டகாலம் சுங்கம் தொடர்பாக சேவையாற்றி திடீர் மாரடைப்பினால் மரணமடைந்த நபருக்காக |

| | | | |
|---|---|---|---|
| | இடத்தில் சுங்க உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்படுகின்ற ஒரு அலுமாரியினுள் ரூபா 95,000 பணம் வைக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிட்ட பணத்தை வைத்திருந்தது என்ன நோக்கத்திற்காக என்பது தொடர்பாக அத்திகதியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தாததுடன் மேற்கூறிய பணப்பெட்டியினுள் வெற்று கடித உறையினுள் உத்தியோகத்தர்கள் அல்லாத நபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததனால் அந்த நபர்களினால் வழங்கிய பணம் உரிய கடித உறையினுள் காணப்பட்டதா என்பது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாகும். | விசாரணைகள் மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அன்பளிப்புச் செய்வதற்காக சுங்க உத்தியோகத்தர் களிடமிருந்து சேகரித்த பணமாகும். 01 அமெரிக்க டொலர் பணம் அச்சிறிய பணப்பெட்டியில் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. |
| (ஆ) | கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை நிலையத்தில் இலங்கை சுங்கத்தின் சிறாப்பர் பிரிவிற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் 24 மணித்தியால சேவை முறைப்பட்டி ஒழுங்கின் (Roster) கீழ் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றுவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | | |
| (i) | 24 மணித்தியால சேவை முறைப்பட்டியின் போது சேகரித்த அனைத்து பணமும் காசோலையும் சேவை முறைப்பட்டியின் இறுதியில் வங்கியில் வைப்புச் செய்தல் உரிய சேவை முறைப்பட்டியினைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரின் பிரதான கடமையாகும். எனினும், | வருமானப் பெறுவனவுகள், வங்கியில் வைப்புச் செய்தல், மற்றும் அறிக்கையிடுதல் சம்பந்தமாக உரிய உத்தியோகத்தரின் பொறுப்பு தொடர்பான மேற்பார்வையினை முறைமைப்படுத்துத | கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 நவம்பர் 25 ஆந் திகதிய Q/24, 787224 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் தண்டப் பணமாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 40,000 பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதற்கு அத்திகதி சிறாப்பர் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அப்பணம் பாதுகாப்பற்ற வகையில் பற்றுச்சீட்டுப் புத்தகத்திற்குள் வைக்கப்பட்டிருந்தது. | ல் மற்றும் சட்ட விதிகள், சுற்றறிக்கைகளுக்கு இணக்கமின்மைகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல். | |
| (ii) | 2019 நவம்பர் 26 ஆந் திகதி முற்பகல் 11.17 மணிக்கு சிறாப்பர் பிரிவில் மேற்கொண்ட பௌதீக பணப் பரீட்சிப்பின் போது வரி மற்றும் தண்டப் பணமாகச் சேகரித்த ரூபா 295,607 பணம் உரிய உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டது. அச்சந்தர்ப்பம் வரை பற்றுச்சீட்டு இலக்கம் N878572 இலிருந்து N878586 வரையான 15 பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்மொத்த பெறுமதி ரூபா 489,287 ஆகும். அத்தகவல்கள் நாளாந்தம் காசேட்டிலும் பதியப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்காய்வு பரீட்சிப்பு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரகாரம் இருக்க வேண்டிய பணத்தினை விட ரூபா 193,680 குறைவான பணம் பொறுப்பாளரின் பொறுப்பில் காணப்பட்டது. | வருமானப் பெறுவனவுகள், வங்கியில் வைப்புச் செய்தல், மற்றும் அறிக்கையிடுதல் சம்பந்தமாக உரிய உத்தியோகத்தரின் பொறுப்பு தொடர்பான மேற்பார்வையினை முறைமைப்படுத்துதல் மற்றும் சட்ட விதிகள், சுற்றறிக்கைகளுக்கு இணக்கமின்மைகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக இணங்குகின்றேன். |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

இது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒரே வகையான அச்சு இயந்திரத்தினை இறக்குமதி செய்த இரண்டு நிறுவனங்களினால் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமான சுங்க குறியீட்டு வகைப்படுத்தல் இலக்கங்களின் (8443.32.40 மற்றும் 8443.32.90) கீழ் அவை விடுவிக்கப்பட்டிருந்தன. அதன் போது ஒரு நிறுவனம் சரியான பொருள் பெறுமதியை வெளிப்படுத்தி VAT, PAL, NBT ஆகிய வரி வகைகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் மற்றைய நிறுவனம் பொருள் பெறுமதியை குறைத்து குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 50 சதவீதத்தினை விட குறைவாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) ஒரு நிறுவனம் 26 அச்சு இயந்திரங்களை (Hitachi-Rx2-SD160W) இறக்குமதி செய்யும் போது எதுவித VAT பணமும் செலுத்தப்பட்டிருக்காததுடன் மற்றைய நிறுவனம் 08 அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்து VAT கட்டணமாக ரூபா 721,896 செலுத்தப்பட்டிருந்தது. | அச்சு இயந்திரங்களை விடுவித்தல் சரியாக இடம்பெற்றுள்ளது என்பதற்காக புலனாய்வினை மேற்கொள்ளல். | அச்சு இயந்திரங்களுக்காக FAX, Scan, ஆகிய (Multy Function) வசதிகள் அடங்கியிருந்தால் சுங்க குறியீட்டு இலக்கம் 8443.32.90 பயன்படுத்தப்படும். அச்சு நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெறுமாகயிருந்தால் 8443.32.40 பயன்படுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) VAT செலுத்தாத நிறுவனம் இயந்திரத்தை (Hitachi-Rx2-SD160w) ரூபா 200,000 பெறுமதியை வெளிப்படுத்தியிருந்ததுடன் மற்றைய நிறுவனம் ரூபா 400,000 பெறுமதியை வெளிப்படுத்தியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 83Accer அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்து அவற்றில் 14 இயந்திரங்களுக்காக சுங்க பெயர் குறிப்பிட்ட வகைப்படுத்தல் இலக்கம் (HS) 843.32.90 இன் கீழ் ரூபா 88,812 தொகையான VAT செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியான 69 இயந்திரங்களுக்காக VAT செலுத்தாது சுங்க பெயர் குறிப்பிட்ட வகைப்படுத்தல் இலக்கம் 8443.32.40 இன் கீழ் விடுவிப்புச் செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இறக்குமதியாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட வரியினைச் செலுத்தாததன் காரணத்தினால் வங்கி பிணையின் அடிப்படையில் பொருட்கள் விடுவிக்கப்பட்ட 5502 சந்தர்ப்பங்களில் 14 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை அல்லது 752 பிணைகளை மீண்டும் | முதிர்ச்சி யடைந்துள்ள வங்கிப் பணிகைள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019-09-07 ஆந் திகதியில் சேமிப்பு வங்கி பிணைகளின் எண்ணிக்கை 510 ஆகும். இந்த வங்கிப் பிணைகளை நீண்ட காலமாக வைத்திருத்தல் சுங்க உத்தியோகத்தர்களின் பிழைகளினாலோ அல்லது கவனயீனத்தினாலோ இடம்பெற்றிருக்காததுடன் அப்பணம் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களம் வணிக மற்றும் முதலீட்டு கொள்கை |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | திணைக்களம் என்பவற்றினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 யூன் வரையான காலப்பகுதியில் இலங்கை சுங்கத்தின் 35 பிரிவுகளினால் இலங்கை சுங்கத்தின் மத்திய புலனாய்வு பதிவு செய்தல் முறைமையின் (ECCR) கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்க பிழைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் ரூபா 33,845,962,239 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் 69 சதவீதமானவை சேமிக்கப்பட்டிருந்ததானது தண்டப்பண வருமானங்களாகவும் ஆகும். விற்பனை வருமானங்களாகும். தண்டப்பண வருமானத்திலும் விற்பனை வருமானத்திலும் 70 சதவீதமானவை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கும் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திற்கும் செலவு செய்யப்படுவதனால் 30 சதவீதம் மாத்திரம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுகின்றது. அதற்கிணங்க புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 33,845,962,239 தொகையான ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 16,341,023,479 தொகையும் இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளை பகிர்ந்தளிப்பதற்காக மற்றும் | அரசாங்கத்தின் வருமானத்தை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற முறைமையை மீண்டும் மீளாய்வு செய்தல். | பதில் வழங்கப்படவில்லை. |

உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக கடந்த காலத்தில் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், காலத்துக்குக் காலம் திருத்தத்திற்கு உட்படுதல் இடம்பெற்றது என்பது அவதானிக்கப் படவில்லை.

உத்தியோகத்தர்களால் அவர்களின் வழக்கமான கடமைத் தன்மைகளில் மேற்கொள்கின்ற சில செயற்பாடுகளுக்காகவும் தற்பொழுது அமுல்படுத்தப் படுகின்ற வெகுமதித் திட்டத்தின் கீழ் பாரியளவிலான வெகுமதிப் பணத்தினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததன் காரணமாக திறைசேரிக்கு கிடைக்க வேண்டியிருந்த அதிக அளவான பணம் அரசாங்க உத்தியோகத்தர் களில் மட்டுப்படுத்தப்பட்ட தரப்பினர்களுக்கு மத்தியில் பகிரப்படும் போக்கு தொடர்ச்சியாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெளிநாடுகளில் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களுக்கு தமது தனிப்பட்ட பாவனைக்கு தேவையான பொருட்களை எடுத்துவரும் வகையில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு கையில் கொண்டு வராத பயணப் பொதிகள் (UPB) | UPB/Gift முறைமையின் நடைமுறைகளை மீளாய்வு செய்து அரசாங்க வருமானத்தை பாதுகாத்தல். | UPB அல்லது பார்சல்களை விடுவிப்பதற்கான சுங்க நடைமுறைகளின் பிரகாரம் அவற்றை பரீட்சித்து பிரதி சுங்க அத்தியட்சகர்கள், உதவி கட்டண உத்தியோகத்தர்கள் மற்றும் சுங்க பரிசோதகர்களின் ஈடுபாட்டில் அது இடம்பெறுவதுடன் அதன் போது ஏதாவது சிக்கல்கள் |

அன்பளிப்புக்கள் (GIFT) ஆகிய திட்டங்களைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற பொருள் போக்குவரத்திற்கான வசதிகளை வழங்குவதற்காக 11 தனியார் நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

எனினும், அன்பளிப்பு (Gift) முறைமையில் நாட்டிற்கு அனுப்பப்படுகின்ற பொருட்களை வகைப்படுத்தல், பாரம் அளவு மற்றும் பெறுமதி தொடர்பான தகவல்களின் சரியான தன்மையை பின்னைய சந்தர்ப்பங்களில் பரீட்சிப்பதற்காக எதுவித நடைமுறையும் இலங்கை சுங்கத்திடம் இருக்கவில்லை. அதன் காரணமாக அப்பொருட்களை எடுத்து வருகின்ற பயணிகளுக்கும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு மிடையே பிழையான கூட்டுச் சேர்த்தல்கள் கட்டியெழுப்பப்படலாம் எனவும் அதன் மூலம் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப் படாதிருக்கலாம் மற்றும் அதன் அடிப்படையில் அரசாங்கத்தின் வரி வருமானத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாது எனவும் அவதானிக்கப் பட்டது. அவ்வாறே சட்ட விரோத இறக்குமதிகள் மற்றும் அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் நாட்டுக்குள் வருகின்ற ஆபத்துக்கள் காணப்படுகின்றது. பாதுகாப்பறையில் காணப்படுகின்ற பொருட்களைப் பாதுகாத்தல் முறையான ஏடுகளைப் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை என அவதானிக்கின்றேன்.

பாதுகாத்து பேணும் நிலையத்திலுள்ள பொருட்களைப் பாதுகாப்பதற்காக எலிகள் மற்றும் கறையான்களில் இருந்து பாதுகாப்பதற்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டது. எவ்வாறாயினும், கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் மற்றும் சில பொருட்களின் தன்மையினால் பொருட்கள் பழுதடைதல் இடம்பெறலாம். பாதுகாத்து பேணும் நிலையத்தில் காணப்படுகின்ற பொருட்களை இனங்காண்பதற்காக பதிவேடுகளைத் தயாரித்து தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது என தயவாகத் தெரிவிக்கின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| | பேணுதல், களஞ்சிய நடைமுறை பின்பற்றுதல் என்பன இடம்பெறாமையும் உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களை இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் வழக்கமான வரி செலுத்தும் நடைமுறைக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்காக தேவையான வசதிகளை வழங்குதல் இலங்கை சுங்கத்தின் “D” பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டிற்காக “D” பிரிவிற்கு சுங்க பணிப்பாளரிலிருந்து அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் வரையான 06 பதவிகளுக்குரிய 15 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் பதவிகளுக்குரிய எழுத்து மூலமாக கடமைகளை ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | உரிய தரப்பினர்களுக்கு பணிகளை ஒப்படைத்தல் முறைப்படி மேற்கொள்ளல். | “டீ” பிரிவின் கடமைகள் மற்றும் கட்டமைப்பு மாற்றப்படுகையில் சுங்க பணிப்பாளரின் மற்றும் பிரதி சுங்கப் பணிப்பாளரின் அங்கீகாரத்தில் புதிய கடமைகளை ஒப்படைத்தல் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | லக்சிறி மற்றும் ட்றைகோ சேவை நிலையங்களினால் பேணப்பட்டு வருகின்ற பொருட்களை பாதுகாத்து வைக்கும் குதங்கள் சுற்றாடலில் சில இடங்களில் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட்டிருந்தும் அத்தியவசியமான இடங்களான பொருட்கள் மற்றும் பயணப் பொதிகளை சுங்க உத்தியோகத்தர்களால் | பாதுகாப்பு கமரா மேற்பார்வையினை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் மற்றும் அத்தியாவசியமான இடங்களை உள்ளடக்கும் வகையில் கமரா முறைமையினை மேம்படுத்துதல். | அந்த நிறுவன வளவிலுள்ள அத்தியாவசியமான இடங்களில் கமரா பொருத்தப்பட்டுள்ளதுடன் பொருட்களைப் பரீட்சிக்கின்ற இடங்களில் கமராக்களைப் பொருத்துவதற்கான தேவைப்பாடு இல்லையென்பது அவதானிக்கப்பட்டதுடன் உரிய பொருட்களைப் பரீட்சிக்கும் நடவடிக்கையை மேற்பார்வை செய்தலானது |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சிக்கும் இடங்கள் பாதுகாப்பு கமராக்களின் மூலம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை | | எனது பிரதி சுங்கப் பணிப்பாளரதும் சுங்க அத்தியட்சகர் களினதும் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகின்றது. மேலும் அப்பொருட்களைப் பரீட்சித்தலானது உரிய பயணிகளின் தனித்துவத்தினைப் பாதுகாக்கும் வகையில் இடம்பெறுதல் வேண்டுமென அவதானிக்கின்றேன். |
| (ஈ) | இறக்குமதியாளர்களால் துறைமுக வளவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு எடுத்துச் செல்லப்படாத இறக்குமி செய்யப்பட்ட பொருட்களை இலங்கை துறைமுக அதிகார சபையினால் கேள்வி கோரி விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது இலங்கை சுங்கத்தினால் அப்பொருட்களின் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறு தீர்மானிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கும் பொருட்களை விற்பனை செய்யப்படுகின்ற அல்லது முன்வைக்கப்படுகின்ற கேள்வி மனுக்களின் பெறுமதிக்குமிடையே அதிக அளவான முரண்கள் காணப்பட்டன. பொருட்களின் பெறுமதியை குறைத்து மதிப்பீடு செய்தலினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் இழக்கப்படுவதனைப் போல் பொருட்களை மிகை மதிப்பீடு செய்வதன் காரணமாக அவற்றின் விற்பனை பெறுமதி குறைவடைதல், பொருட்கள் அழிவடைதல், மீண்டும் மீண்டும் கேள்வி கோருவதற்காக சமர்ப்பிப்பதற்கு மேலதிக | துறைமுகத்தில் கைவிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் நடைமுறையினை மீளாய்வு செய்தல் தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ளல். | கைவிடப்பட்ட பொருட்களின் கேள்வி விலையை மதிப்பீடு செய்வதற்காக இலங்கை சுங்கத்தினால் பல்வேறு வரையறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பொருட்களின் சந்தைப் பெறுமதி, பொருட்களை இலங்கையில் தரையிறக்குகையில் அதன் CIF பெறுமதி, பொருட்களுக்கான தொடர்புபட்ட சுங்கத் தீர்வைப் பெறுமதி, பொருட்களை உற்பத்தி செய்த நாடு, பொருட்களின் தரம், பொருட்கள், உற்பத்தி செய்த காலம் என்பன இவற்றில் பிரதான விடயங்களாக இருந்ததுடன் இவை அனைத்தையும் கவனத்திற்கு எடுத்து உரிய பொருட்களை கேள்வி கோரி விற்பனை செய்யப்பட வேண்டிய பெறுமதி தீர்மானிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயம் மற்றும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருந்தல் ஆகிய குறைபாடுகள் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கேள்வி கோருவதன் மூலம் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் பெறுமதியை தீர்மானித்த முறைமை தொடர்பான தகவல்கள் மற்றும் ஈடுபடுத்தப்பட்ட சுங்க பெயர் குறிப்பிட்ட வகைப்படுத்தல் இலக்கம் (HS CODE) என்ன என்பது தொடர்பான தகவல்கள் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக தீர்மானிக்கப்பட்ட பெறுமதியினதும் அறவிடப்பட்ட வரிப் பெறுமதியினதும் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்கு முடியாமை மற்றும் ஒரு கேள்வி கோரலின் போது விற்பனை செய்யப்படாத பொருட்களை அடுத்த கேள்வி கோரலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதா அவ்வாறு இல்லாதுவிடின் அதற்கான காரணம் என்ன என்பது தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் ஒழுங்கு விதிமுறைப்படி பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | இலங்கை சங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் (CDU) ஏலத்தில் விற்கப்படுகின்ற பொருட்களுக்காக சரியான மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு அதிக அளவிலான வரிப் பணம் இழக்கப்படுதல் இடம்பெறுகின்றது என | மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் (CDU) மேற்கொண்ட ஏல விற்பனையில் பொருட்களை விற்பனை செய்யும் நடைமுறையினை மீளாய்வு செய்தல். | இலங்கை சுங்கத்தின் மதிப்பீட்டு விலைக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற விலைக்கும் இடையே பாரியளவு முரண்கள் காணப்படுவதனால் இலங்கை சுங்கத்தின் பொருட்களை விலை மதிப்பீடு செய்யும் நடைமுறையிலுள்ள பலவீனங்களின் காரணமாக |

| | | |
|---|---|---|
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க இறக்குமதியாளர்களால் துறைமுக வளவிலிருந்து அகற்றி எடுத்துச் செல்லாமையின் காரணமாக இலங்கை சுங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவின் (CDU) மூலம் 2019 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரி விற்பனை செய்யப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 03 கேள்விகளின் மூலம் விற்கப்பட்ட 07 வாகனங்களுக்காக இலங்கை சுங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 19,427,888 ஆக இருந்த போதிலும், ஏல விற்பனைப் பெறுமதி ரூபா 32,172,000 ஆகும். அதற்கிணங்க மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் மாத்திரம் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததனால் அதன் போது அரசாங்கத்திற்கு கிடைத்த வரி வருமானம் ரூபா 3,174,824 ஆக இருந்தும் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டியிருந்த வரிப் பணம் ரூபா 5,345,789 ஆக இருந்ததனால் முரண்களின் அடிப்படையில் இழக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 2,170,965 ஆகும். | | அன்றி நிச்சயமாக கேள்வி தாரர்களின் தனிப்பட்ட தீர்மானத்தின் காரணமாக என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. |

(ஊ) பிணைகளைப் பரீட்சித்தல்

--------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) கொள்கலன்களைப் பரீட்சித்தல் பிரிவினால் 2019 யூலை 10 ஆந் திகதி வரை ரூபா 112,841,773 பெறுமதியான 60 வங்கிப் பிணைகள் பெற்றுக் | பிணைகளின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள பொருட்களுக்காக அதற்கான காரணத்துக்கான | NC குழு மற்றும் வகைப்படுத்தல் பிரிவினால் பொருட்களை வகைப்படுத்துவதிலுள்ள சிக்கல்கள் சம்பந்தமாக |

கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 31 பிணைகளும் 156 நாட்களிலிருந்து 823 நாட்கள் வரையான காலம் இறக்குமதியாளர்களால் விடுவித்துக் கொள்ளப்படாத ரூபா 78,003,551 பெறுமதியான பிணைகளாகும். மேற்கூறிய 31 சந்தர்ப்பங்களில் 2 சந்தர்ப்பங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருட்களின் ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் சிக்கலின் காரணமாக இவ்வாறு வங்கிப் பிணையின் அடிப்படையில் பொருட்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. பொருட்களின் பெயர் குறித்து வகைப்படுத்தல் சிக்கலுக்குரிய தீர்மானத்தினை வழங்குவதற்காக NC (Nomenclature classification) குழு மற்றும் பொருட்களை வகைப்படுத்தல் பிரிவு (classification Unit) விரைவாக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வங்கிப் பிணைகளை நீண்டகாலமாக வைத்திருக்க வேண்டி ஏற்பட்டமையும் அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய வரியை அறவீடு செய்தல் தாமதித்தமையும் காரணமாக பணத்தின் காலரீதியான பெறுமதி வீழ்ச்சியடைந்ததற்கு நேரொத்த வகையில் அரசாங்கத்திற்கு பாரியவிலான நட்டம் ஏற்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

கொள்கலன் பரீட்சிப்பு பிரிவினால் கம்பனிகளின் பிணைகள் மற்றும் தனியார் விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வு செய்தல் மற்றும் சுங்கத்தின் பொருட்களை வகைப்படுத்தல் பிரிவு (CCU) மற்றும் NC குழு தீர்மானம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை வங்கிப் பிணைகளின் காலத்தை நீடிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. பேணப்படுகின்ற பதிவேட்டினையும் வங்கி முகாமைத்துவ முறைமையையும் ஒப்பீடுசெய்த போது பின்வரும் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

i. 2020-01-06 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவேட்டின் பிரகாரம் தீர்த்து வைக்கப்படாத வங்கி பிணையின் எண்ணிக்கை 40 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 125,098,810.60 ஆகும்.

ii. தீர்த்து வைக்கப்பட்ட 28 வங்கி பிணைகள் வங்கி பிணை முகாமைத்துவ முறைமையிலிருந்து விடவிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் அதன் பெறுமதி ரூபா 90,923,707 ஆகும். அதனை வங்கிப் பிணை முகாமைத்துவ முறைமையிலிருந்து விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- RCT/BG/56/2018 ஆம் இலக்க பிணைக் கோவை தொடர்புபட்ட வங்கிப் பிணையின் பெறுமதி ரூபா 3,000,000 ஆகும். உரிய பதிவேடுகளில் அது சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | பிணைகள் சம்பந்தமாக பேணப்படுகின்ற பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாததுடன் நீண்ட காலமாகத் தீர்த்து வைக்கப்படாத பிணைகள் காணப்படுவது சம்பந்தமாக இலங்கை சுங்கம் போதியளவு மேற்பார்வை மேற்கொண்டிருக்கவில்லை.<br><br>கொள்கலன் பரீட்சிப்பு பிரிவிற்குரிய வங்கி பிணைகள் சம்பந்தமாக ஆசிகுடா கணனி முறைமையில் (Ayscuda World Bank Guarantee Management System) உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் வங்கி பிணை சம்பந்தமாக அப் பிரிவினால் பேணப்படுகின்ற பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட பிணைப் பெறுமதி, பிணையின் அளவு, தொடர்பு இலக்கம் முதலியவற்றில் வித்தியாசங்கள் காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. முதிர்ச்சியடைந்த பிணைகள் சம்பந்தமான தகவல்களை சுயமாகத் தெரியப்படுத்துகின்ற முறைமை தயாரிக்கப்படாததன் காரணமாக தொடர்ச்சியான மேற்பார்வைக்கு உட்படுத்த வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | வங்கி பிணை முறைமையில் அது பிழையாக உள்ளடக்கப் பட்டிருந்தது. ரூபா 13,247,629 என்பதாகும். அப்பெறுமதி I164268 ஆம் இலக்க சுங்க புள்ளிவிபர ரீதியான பெறுமதியாகும். (Statistical value) cage No 46) அதனை உரிய பிணை தகவல் முறைமையில் சரி செய்வதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | தலைமை அலுவலகத்தில் ‘‘ரேன்க் கொள்கலன் பிரிவு’’ (RCT) பேணுகின்ற பதிவேட்டின் பிரகாரம் ரூபா 112,841,773 பெறுமதியான 60 வங்கிப் பிணைகள் தீர்த்து வைக்கப் படாதிருந்தும் வங்கி பிணை | மாற்றத்திற்கான காரணத்தை பரீட்சித்து சரியான பெறுமதியை உறுதிப்படுத்துதல். | RCT/BG/62/2018 ஆம் இலக்க பிணை கோவைக்குரியதான வங்கிப் பிணையின் பெறுமதி ரூபா 289,872 ஆகும். உரிய பதிவேடுகளில் அது சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வங்கி பிணை முறைமையில் |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் ரூபா 201,693,693 தொகையான 93 வங்கி பிணைகள் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது என காட்டப்பட்டிருந்தது. | | அது பிழையாக உள்ளடக்கப்பட்டிருந்தது ரூபா 1,319,241 என்பதாகும். அப்பெறுமதியானது I 189489 ஆம் இலக்க சுங்க பதிவேட்டின் பெறுமதியாகும். (Statistical Value) (Cage No 46) எவ்வாறாயினும், அந்த வங்கி பிணை 2019-09-18 ஆந் திகதி விடுவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | வங்கிப் பிணைப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,289,872 பெறுமதியான வங்கி பிணை முறைமையில் ரூபா 14,566,898 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | சுங்க புலனாய்வு சம்பந்தமான செயலாற்றல்<br>----------------------------------------------- | | |
| (i) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 யூன் 30 வரையான காலப்பகுதியில் 32572 சுங்க புலனாய்வுகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 15,531 புலனாய்வுகள் அதாவது 48 சதவீதமானவை கணக்காய்வுத் திகதி வரையும் புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கவில்லை. 50 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை அதாவது 7241 புலனாய்வுகள் 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட புலனாய்வுகளாகும். | சுங்க புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கான தாமதங்களை மீளாய்வு செய்தல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தி அரசாங்க வருமானத்தை பாதுகாத்தல் | இது தொடர்பாக உரிய பிரிவிற்குச் தெரியப்படுத்தி பௌதீக பதிவேடுகளில் உள்ள தகவல்களுக்கும் சுங்க புலனாய்வு பதிவு செய்யப்பட்ட முறைமையிலுள்ள தகவல்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மேற்கூறிய காலப்பகுதியில் சுங்க புலனாய்வினை ஆரம்பிப்பதற்கு உரிய சுங்கத்தவறுகள் என்ன என்பதனைக் குறிப்பிடும் போது அதிக அளவான தடவைகள் அதாவது 8,047 சந்தர்ப்பங்களில் “Null” ஆகக் | சுங்க புலனாய்வினை ஆரம்பிப்பதற்கான தாமதங்களை மீளாய்வு செய்தல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தி அரசாங்க | புலனாய்வுக் கோவையினை ஆரம்பித்து முடிவுறுத்துவதற்கு எடுக்கும் காலம் eCCR தரவுகளின் பிரகாரம் அளத்தல் சிக்கலானதாகும். சுங்க திணைக்களத்தின் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள eCCR |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது சுங்கத் தவறுகள் என்ன என்பதனை உறுதியாக இனங்காணாது சுங்க புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை பாதுகாத்தல். | கணக்கின் நுழைவு மட்டங்களுக்குள் eCCR இல் பதிவு செய்துள்ள அனைத்து கோவைகள் தொடர்பாக ஒரு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளும் போது பதிவு செய்வதற்குரிய சுங்க தவறுகள் (Offence Category) அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுவதில்லை. |
| (iii) | ஒரு நிறுவனத்தினால் மீண்டும் மீண்டும் சுங்கதவறுகள் சம்பந்தமாக குற்றவாளியாக இருந்ததுடன் மேற்கூறிய காலப்பகுதியில் 50 சந்தர்ப்பங்களிற்கும் மேற்பட்ட தடவைகள் அவ்வாறு குற்றவாளியான 18 நிறுவனங்கள் காணப்பட்டன. தொடர்ச்சியாக சுங்க தவறுகளை மேற்கொள்கின்ற நிறுவனம் / நபர்களை இனங்காண்பதற்காக முறையான நடைமுறை இலங்கை சுங்கத்தினால் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. | சுங்கத் தவறுகள் மேற்கொள்ளு வதனை அதைரியப்படுத்தும் நடைமுறையினை ஏற்படுத்துதல். | ஒரே நிறுவனத்தினால் பொருட்களை இறக்குமதி செய்யும் போது 50 சந்தர்ப்பத்திற்கு மேற்பட்ட தடவைகள் சுங்கத் தவறுகள் சம்பந்தமாக குற்றவாளியாகியிருந்த 18 நிறுவனங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட சுங்கத் தவறுகளின் எண்ணிக்கையின் கூட்டுமொத்தம் 3483 ஆகும். சுங்கத் தவறுகள் சம்பந்தமான புலனாய்வினை ஆரம்பித்த பிரிவுகளுக்கு மத்தியில் வருமான மேற்பார்வை பிரிவின் கீழ் 2212 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கின்றேன். |
| (ஏ) | Carnet திட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட வரியை அறவிடாது மீள் ஏற்றுமதி அல்லது மீள் இறக்குமதி செய்தல் தற்காலிக அடிப்படையில் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தும் இது சம்பந்தமாக கீழே தரப்பட்டுள்ளவாறு பலகுறைபாடுகள் காணப்பட்டமை கணக்காய்வினால் சுட்டிக் | முறையான பின் தொடர் நடவடிக்கைகள் முறைமையினைத் தயாரித்தல். | இது சம்பந்தமாக பின் தொடர் நடவடிக்கை எடுத்தலானது விமானப் பொருள் பிரிவில் மாத்திரம் மேற்கொள்ள முடியாதுள்ளது. விமானப் பொருள் பிரிவினை விட விரிவான வீச்சுக்கு இது தொடர்புபடுவதனால் இது தொடர்பான ஒரு நடைமுறையினைத் தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தும் அதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பிரிவுகளுக்கு தனியாக வைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் மற்றும் பதிவேடுகளில் பதிவதனை மீண்டும் ஒப்பீடு செய்யப்பட்டிருக்காமை.<br><br>(ii) பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மீள் ஏற்றுமதி அல்து மீள் இறக்குமதி செய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை.<br><br>(iii) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மீள் ஏற்றுமதி மற்றும் மீள் இறக்குமதி செய்திருக்காத நிறுவனம் / நபர்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை<br><br>(vi) Carnet முறைமையின் கீழ் இறக்குமதி செய்து உள்நாட்டில் கைதவிர்ப்புச் செய்துள்ள பொருட்கள் அல்லது உள்நாட்டில் பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருட்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. | | |
| (ஐ) | லக்சிறி சேவை நிலையத்திற்கு (UPB warehouse) இணைத்துக் கொள்ளப்பட்ட 16 நிரந்தர பதவியணி மற்றும் 06 பதலீட்டு பதவியணியினர்களாக 22 | உள்ளகக் கட்டுப்பாடுகளை முறைமைப்படுத்தல் இலங்கை சுங்கத்தின் அனைத்து பிரிவுகளிலும் | வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவேடுகளில் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு அவற்றினை சரி |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் வருகை வெளிச் செல்லலிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டில் பல பலவீனங்கள் காணப்பட்டன. | இக்குறைபாடு காணப்படுவதனால் அவற்றினை முறைமைப்படுத்து வதற்காக பொது நடவடிக்கை எடுத்தல். | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமைக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட முறைமையில் சரியாக பேணப்படுகின்றது. |
| (ஒ) | கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருகை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சுங்க பதவியணியினருக்காக வருகை மற்றும் வெளிச் செல்லல் சம்பந்தமாகக் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களை சரிசெய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாடுகளை முறைமைப் படுத்துதல். இலங்கை சுங்கத்தின் அனைத்து பிரிவுகளிலும் இக்குறைபாடு காணப்படுவதனால் அதனை முறைமைப் படுத்துவதற்காக பொது நடவடிக்கை எடுத்தல். | பயணிகள் சேவை (கட்டுநாயக்கா) பிரிவில் பேணப்பட்டு வருகின்ற வருகை மற்றும் வெளிச் செல்லலினை பதிவு செய்கின்ற பதிவேட்டினை முறையாகப் பேணுவதற்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அவை சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை) மற்றும் பிரதி சுங்கப் பணிப்பாளரினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. முறைப்படியாக வருகை மற்றும் வெளிச் செல்லலைப் பதிவதற்கு உரிய உத்தியோகத்தர் களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ஓ) | கட்டுநாயக்க பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருகை நிலையத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட நிரந்தரமான பதவியணியிலுள்ள சுங்க உத்தியோகத்தர்களுக்காக (i) விடுமுறைப் பதிவேடு அல்து குறுகிய விடுமுறைப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கட்டுப்பாடுகளை முறைமைப்படுத்தல். இலங்கை சுங்கத்தின் அனைத்து பிரிவுகளிலும் இக்குறைபாடு காணப்படுவதனால் அதனை முறைமைப் படுத்துவதற்காக பொது நடவடிக்கை எடுத்தல். | அனைத்து குறுகிய விடுமுறைப் பதிவேடுகளையும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ii) வெளிச்செல்லல் பதிவேடு மற்றும் மேலதிக நேர வேலைப் பதிவேடு குறைபாடுகளுடன் பேணப்பட்டிருந்தன. | | |
| (ஔ) கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருகை நிலையத்தினை பயன்படுத்தி கூட்டமைப்பான வகையில் மோசடித் தன்மையாக பொருட்களை தொடர்ச்சியாக எடுத்துவருதல் நீண்டகாலமாக இடம்பெற்று வருவதுடன் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அவ்வாறு கொண்டு வரப்பட்டிருந்த மோசடித் தன்மையான பொருட்களின் சுங்க மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 605,796,308 ஆகும். மேற்கூறிய பொருட்களைப் பரீட்சித்தல், வரி அறவீடு செய்தல் சம்பந்தமாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பின்வரும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக எதுவித நடவடிக்கையையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) உள்ளக சுற்றறிக்கைகளில் (DOPL) குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | திணைக்கள கட்டளைகளை பின்பற்றுதல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகளை நாளதுவரையாக அமுல்படுத்துதல். | இந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மீண்டும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | காலத்தின் தேவைக்கு இணங்க உள்ளக சுற்றறிக்கைகளை நாளதுவரையாக்குதல் மற்றும் சிறாப்பர் பிரிவின் நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்காக உள்ளக சுற்றறிக்கைகளை வழங்குதல். | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | போதியளவில் பாதுகாப்பு கமராவினை (CCTV) பொருத்துதல் மற்றும் அந்த கமரா காட்சிகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல். | - மேற்படி - | இதற்காக உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (iv) | எடுத்து வரும் பொருட்களின் நிறையை அளப்பதற்குரிய தரவுகளை (Asycuda) உள்ளடக்கும் வகையில் கணனி முறைமையை அபிவிருத்தி செய்தல். | - மேற்படி - | இது சம்பந்தமான இணங்கிக் கொள்வதுடன் மேலும் ஆய்வு செய்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |
| (v) | எடுத்துவரும் பொருட்களின் பெறுமதி மற்றும் நிறை தொடர்பான தகவல்களை ஒப்பீடு செய்வதற்காக உரிய விமானத்தின் மூலம் வருகை தருகின்ற விமான நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் இயலுமையினைப் பரீட்சித்தலும் அது சம்பந்தமான நடைமுறையைத் தயாரித்தலும். | - மேற்படி - | இது சம்பந்தமான இணங்கிக் கொள்வதுடன் மேலும் ஆய்வு செய்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |
| (vi) | வருகை நிலையத்தை பயன்படுத்தி தொடர்ச்சியாக மோசடித் தன்மையான பொருட்களை எடுத்து வருகின்ற நபர்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டுமென்றே வரி மோசடி செய்வதற்கு முடியுமான வகையில் உரிய தரப்பினர்களுக்கு தவறாக பணத்தை வழங்கு | - மேற்படி - | திணைக்கள கட்டளை இலக்கம் 700 மற்றும் 706A இன்மூலம் விதிக்கப்பட்ட சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிழையான |

| | | | |
|---|---|---|---|
| | வதனைத் தடுப்பதற்காக சட்ட விதிகளைச் செயற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுத்தல். | | நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (vii) | வணிகத் தன்மையான பொருட்களை எடுத்து வருகின்ற நபர்கள் தொடர்பான தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புகின்ற நடைமுறையைத் தயாரித்தல். | - மேற்படி - | அதற்காக கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்க வேண்டியதுடன் சுங்க உத்தியோகத்தர்களால் தற்பொழுது காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (viii) | வணிகத் தன்மையான பயணிகளுடன் எடுத்து வரப்படுகின்ற பொருட்களைக் கட்டுப் படுத்துவதற்காக விமான சேவைகள் கம்பனியுடன் தேவையான கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்தல். | - மேற்படி - | இலங்கை சுங்கத்திற்குரிய நோக்கெல்லைக்குள் ஒரு விமானப் பயணி எடுத்து வருகின்ற பொருளுக்கு காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க வரி, தண்டனை வாடகை அறவிடப்படுகின்றது. |
| (ix) | உத்தியோகத்தர்கள் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர்களிடம் காணப்படுகின்ற தனிப்பட்ட பணம் மற்றும் ஏனைய உயர்ந்த பெறுமதியான பொருட்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.<br><br>மேலே குறிப்பிட்டவாறு பாரிய அளவிலான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களின் காரணமாக திணைக்களத்தின் உயர் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு அனுப்பப்பட்டது. | - மேற்படி - | பதில் வழங்கப்படவில்லை. |
| • | அரசாங்கத்தின் வரி வருமானம் நிர்ணயிக்கப்பட்டவாறு அறவிடப்படாமை. | | |

- சட்டவிரோத மற்றும் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் நாட்டுக்குள் வருகின்ற ஆபத்து காணப்படல்.

- இப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்ற வெளிநாட்டு நாணய மாற்றுக்களின் பெறுமதியை வெளிப்படுத்தாமை

- நிர்ணயிக்கப்பட்ட வரியினைச் செலுத்தி பொருட்கள் இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர் களுக்கு சந்தை சாதகமற்ற நிலைமை உருவாகுதல் ஆகிய நாட்டுக்கு பாதகமான நிலைமை ஏற்படக்கூடியவாறு சுற்றாடல் உருவாகியுள்ளது.

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் தமது நோக்கெல்லைக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கொள்கை மற்றும் உரிய சட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |